**BRAMPTON** **Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரின் எதிர்கால வளர்ச்சிக்கு உருவம் கொடுக்க உதவுங்கள்

***ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, நகரின் புதிய அதிகாரபூர்வ திட்டமாகிய – "ப்ராம்ப்ட்டன் திட்டத்திற்கு" – சமுதாயத்தினரின் கருத்துக்களை கேட்கிறது.***

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 22, 2021) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ப்ராம்ப்ட்டன் திட்டம்: நகர கட்டமைப்புக்கான பணிமனை (Brampton Plan: City Structure Workshop) என்னும் நகரம் தழுவிய பொதுமக்களுக்கான பயிற்சிப்பட்டறை வகுப்பினை ஏப்ரல் 10, சனிக்கிழமை காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடத்த இருக்கிறது; இதில் குடியிருப்புவாசிகள், வியாபார உரிமையாளர்கள் சமுதாய குழுக்கள் மற்றும் திட்டத்தில் பங்கெடுத்து வேலைச் செய்வோர் ஆகியோர், இந்த ப்ராம்ப்ட்டன் திட்டத்திற்கான தங்கள் கருத்துக்கள்/ஆலோசனைகளை வழங்கலாம்.

இந்த பயிற்சிப் பட்டறையானது, உள்ளீடுகளைச் சேகரிப்பதற்கான பொதுமக்கள் கலந்துகொள்ளும் தொடர் நிகழ்வுகளின் ஒரு பகுதியாக உள்ளது; இது நகரத்தின் அதிகாரப்பூர்வ திட்டம் பற்றிய மீள்பார்வை செய்யப்பட்டு, திட்டத்தின் அடுத்த கட்டத்திற்குள் நுழையும் போது நிகழ்த்தப்படுகிறது. எதிர்காலத்தில் ப்ராம்ப்ட்டன் நகரம் எவ்வாறு மேம்பாடு அடையும் மற்றும் வளர்ச்சி பெறும் என்பதற்கான ஒரு வரைபடத்தை ப்ராம்ப்ட்டன் திட்டம் உருவாக்கும்.

2021 ஆம் ஆண்டில், ப்ராம்ப்ட்டன் நகரமானது, ப்ராம்ப்ட்டன் 2040 க்கான தொலைநோக்குப் பார்வையில் குடியிருப்பாளர்கள், சமூக குழுக்கள் மற்றும் முகவர்கள், பழங்குடி மக்கள், கட்டிடம் கட்டும் நிறுவனங்கள், டெவலப்பர்கள், உள்ளூர் பங்குதாரர்கள் மற்றும் அரசாங்கத்தின் பிற மட்டங்களுடன் சேர்ந்து, கட்டமைக்கப்பட்ட விரிவான சமூக ஆலோசனை செயல்முறைகளைத் தொடரும். இந்த உள்ளீடானது, ப்ராம்ப்ட்டனுக்கு மிகவும் துடிப்பான, சுற்றுச்சூழல்ரீதியாக நிலைத்து நிற்கவல்ல மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்க உதவும்.

சமூகப் பின்னூட்டக் கருத்துக்கள் நகர சபைக்கு வழிகாட்ட உதவும். நகரசபையினால் அங்கீகரிக்கப்படும்போது, ப்ராம்ப்ட்டனில் மேம்பாடு மற்றும் எதிர்கால வளர்ச்சியை மேலாளுகை செய்யவும் வழிகாட்டவும் இந்த ப்ராம்ப்ட்டன் திட்டம் ஒரு சட்டரீதியான கட்டமைப்பை நிலைநாட்டும். 700,000 க்கும் மேலான மக்கள் தொகையைக் கொண்டபடி, அதிவேகமாக வளர்ந்து வரும் நகரத்தை ஆதரிக்க சாலைகள், போக்குவரத்து மற்றும் பிற அத்தியாவசிய உள்கட்டமைப்பு தேவைப்படும் இடங்களுடன் கூடவே, மேலதிகமான வீடுகள், கடைகள் மற்றும் வணிக கடைகள், பூங்காக்கள், நடைபாதை தடங்கள் மற்றும் இயற்கை பகுதிகள் எங்கெங்கு கட்டப்படும் என்பதை ப்ராம்ப்ட்டன் திட்டம் தீர்மானிக்கும்.

2006 ஆம் ஆண்டில் பிராம்ப்டனின் கடந்த அதிகாரப்பூர்வ திட்டத்தில் துவங்கி, இந்த நகரம் கனடாவின் ஒன்பதாவது பெரிய நகரமாக மாறியுள்ளது மற்றும் மக்கள்தொகை பெருக்கம் மாகாண சராசரியை விட மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. மாகாண மற்றும் பிராந்திய திட்டமிடல் கொள்கைகளிலும் மாற்றங்கள் இருந்திருக்கின்றன. ப்ராம்ப்ட்டன் 2040 க்கான தொலைநோக்குப்பார்வை (*Brampton 2040 Vision: Living the Mosaic)* யின் ஆர்வங்களை நிறைவேற்றுவதற்கு, இந்த ப்ராம்ப்ட்டன் திட்டமானது, இந்த திட்டமிடல் கொள்கைகளை நகரத்தின் யுக்திரீதியான திட்டங்கள், திட்டப்பணிகள் மற்றும் மேம்பாட்டுடன் ஒருமிக்கச் செய்யும். கூடவே கவுன்சிலின் ஆயுட்கால முன்னுரிமை கொண்ட விஷயங்களுக்கு ஆதரவளிப்பதையும் ஒருமிக்கச் செய்யும்.

Brampton.ca/BramptonPlan க்கு வருகை புரிந்து, தற்சமயம் நடந்தவாறிருக்கும் முனைப்புகளைப்பற்றி தெரிந்துகொள்ளவும், தங்களுக்கு எது ஒரு பொருட்டாக இருக்கிறது என்பதைத் தெரிவிக்கும் ஒரு ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளவும் குடியிருப்புவாசிகள் உற்சாகம் அளிக்கப்படுகிறார்கள். கருத்துக்கள் அல்லது கேள்விகள் இருப்பின் மின்னஞ்சல் செய்ய வேண்டிய முகவரி /sqmail/src/compose.php?send_to=opreview@brampton.ca.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் நகரில் நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் மக்கள் கருத்தாக இருக்கிறார்கள். முன்னேற்றத்திற்கும் நாங்கள் கூட்டு சேர்கிறோம், அதனால்தான் 'ப்ராம்ப்ட்டன் திட்ட'த்திற்கு பொது மக்கள் உள்ளீடு மிகவும் முக்கியமானது, நாங்கள் வளர்ந்து உயர்ச்சி பெறும்போது எதிர்காலத்திற்குள் நுழைய ப்ராம்ப்ட்டன் நகரத்தை வழிநடத்த வேண்டும். இந்த ஆலோசனை செயல்முறை முழுவதிலுமாக, அனைவரையும் உள்ளடக்கிய, பாதுகாப்பான, நிலையான மற்றும் வெற்றிகரமான ஒரு நகரத்தை உருவாக்குவதற்கான உள்ளீடுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"*ப்ராம்ப்ட்டன் 2040 தொலைநோக்குப் பார்வை: கலப்பினமான வாழ்தல்* என்பது நன்றாக நிலைத்து நிற்கவல்ல துடிப்பான எதிர்காலமாக ப்ராம்ப்ட்டன் நகரை படமாக சித்தரிக்கிறது. 'ப்ராம்ப்ட்டன் திட்டம்' என்பது செயல்முறையின் ஒரு முக்கிய பகுதியாகும், மேலும் குடியிருப்பாளர்களின் ஈடுபாடு மேலும்மேலும் அதிகரிப்பதை நாங்கள் எதிர்நோக்குகிறோம்; அடுத்து எங்கள் அதிகாரப்பூர்வ திட்ட மீள்பார்வையிடுதலின் அடுத்த கட்டத்திற்குள் நுழைகிறோம். நகரத்தின் நீண்டகால தொலைநோக்கு பார்வையை செயல்படுத்த, நகரின் அனைத்து திட்டமிடல், திட்டப்பணிகள் மற்றும் மேம்பாடு ஆகியவை ஒன்றிணைந்து செயல்படுவதை உறுதிசெய்வதற்கான ஒரு சிறந்த மற்றும் சிந்தனைமிக்க கட்டமைப்பை நாங்கள் ஒன்றாக இணைப்போம். "

- *மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைமைப் பொறுப்பு, திட்டமிடல் மற்றும் மேம்பாட்டிற்கான குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"திட்டமிடல் மற்றும் மேம்பாட்டிற்கான குழுவின் துணைத் தலைவராக இருந்தபடி, நகரின் முழு சமூகத்திற்கும் பயனளிக்கும் வகையில் ப்ராம்ப்ட்டன் வளர்வதையும், எங்கள் பிராந்திய அதிகாரப்பூர்வ திட்டத்துடன் ஒத்துப்போவதையும், ப்ராம்ப்ட்டன் நகரின் எதிர்காலத்திற்கான பாதையை அமைப்பதையும் உறுதி செய்வது எங்கள் முன்னுரிமை கொண்ட விஷயமாகும். நகரத்தின் புதிய அதிகாரபூர்வ திட்டத்தை நாங்கள் உருவாக்கும்போது, குடியிருப்பாளர்களும் பங்குதாரர்களும் பங்கேற்பதையும் அவர்களின் யோசனைகளை அளிக்க முன்வருவதையும் நான் ஊக்குவிக்கிறேன்."

- *பேட் ஃபோர்ட்டினி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 7 & 8; துணைத் தலைமைப் பொறுப்பு, திட்டமிடல் மற்றும் மேம்பாட்டிற்கான குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"2006 ஆம் ஆண்டில், ப்ராம்ப்ட்டனின் கடந்த அதிகாரப்பூர்வ திட்டம் அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து நமது நகரம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் மாற்றத்தையும் கண்டுள்ளது, நமது மக்கள் தொகையும் 61 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது. ப்ராம்ப்ட்டன் ஒரு பெருமைமிக்க கடந்த காலத்தையும் பிரகாசமான எதிர்காலத்தையும் கொண்ட, மாறிக்கொண்டே இருக்கும் ஒரு நகரமாகும். ப்ராம்ப்ட்டன் நகரம் வரவேற்கத்தக்க நகரமாகவும், எல்லோரும் அனுபவிக்க விரும்பும் சமூகமாகவும் எவ்வாறு வளர்கிறது என்பதை 'ப்ராம்ப்ட்டன் திட்டம்' மேலாளுகை செய்யும்."

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்..

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca

Media Release